# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

இந்த மாதத்தில் முக்கியமாக நாம் பரிசுத்த ஆவியின் திருநாளைக் கொண்டாடுகின்றோம். பெந்தெக்கோஸ்தே விழா அப்போஸ்தலர்களின் புதிய வாழ்வைப்பெற்ற அனுபவம். பெந்தெக்கோஸ்தே அனுபவம் ஒரு இறை அனுபவம். தூய ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கும், அவர்களோடு கூட இருந்து செபத்தில் ஈடுபட்டிருந்த மரியாளுக்கும் அக்கினி நாக்குருவம் கொண்டு ஒவ்வொருவர் மேலும் இறங்கின அருமையான அனுபவம், அழகான அனுபவம் என்று கூறமுடியாது. மாறாக பயம், அச்சம், ஏக்கம் போன்றவை சூழ்ந்து நிற்க புதியதொரு அனுபவத்தை பெற்றுக்கொண்டார்கள். இந்த அனுபவம் முழு மனித வாழ்க்கையை மாற்றிக் கொண்டது. அவர்கள் மட்டிலிருந்த அச்சம், பீதி, பயம் போன்றவை அகன்று புதிய வாழ்வை பெற்றுக்கொண்டார்கள். அவ்வாழ்வின் அனுபவம் உயிர்த்த கிறிஸ்துவிற்கு சாட்சிகளாக அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை ஊற்றெடுக்க தொடங்கியது. புதிய நெறியைக்கொண்ட வாழ்வை ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள். ஆவியைப் பெற்றவர்கள் எல்லோரும் தங்களிடம் இருந்த பழைய பாவமாகிய அகங்காரம், பொறாமை, வன்மையான செயற்பாடுகள், கோபம், போட்டி, ஏற்றத்தாழ்வு, போன்றவற்றிலிருந்து விடுபட்டு புதிய வாழ்வாகிய இரக்கம், அன்பு, நீதி, உண்மை, பகிர்தல், அமைந்து நடத்தல் போன்ற அருமையான வாழ்வை வாழத் தொடங்கினார்கள். தூய பவுல் அடிகளார் தன்னிடம் இருந்த ஆணவப்போக்கு, தலைக்கனம், “நான்” என்ற மமதை, அதிகார போக்கு அவற்றையெல்லாம் விட்டு விட்டு கீழ்படிவு, அன்பு, பொறுமை போன்ற நல்ல குணங்களை தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்தார். எமது வாழ்க்கையில் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டியதை அப்பொஸ்தலர்பணி நூலில் பார்க்கின்றோம். (அப். பணி. 2:42-45)

**இறைவார்த்தையைப் படித்தல். - கூடியிருந்து செபித்தல். அப்போஸ்தலர் படிப்பினையைக் கேட்டல். அப்பம் பிட்குதல். (பகிர்ந்து வாழ்தல்)**

இவை பெந்தக்கோஸ்தின் அனுபவமாக இருக்கின்றது, புதிய வாழ்வின் சாட்சியமாக இருக்கின்றது. இவற்றை எமது வாழ்வில் வாழ்ந்து காட்ட முயற்சி எடுப்போம். அத்தோடு ஆனிமாதம் நற்கருணை மாதமாகவும் இருக்கின்றது. திவ்விய நற்கருணையின் பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்து கொள்ளவும், அதன் மாண்பையும், மகத்துவத்தையும் புரிந்து கொள்ளவும் நாம் முன்வருவோம், இறைவனின் ஆசியையும், அருளும் உங்களோடு இருப்பதாக.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
Parish Priest
Our Lady of Deliverance Tamil Catholic Mission
Montreal (QC), Canada.